**செய்தி வெளியீடு எண்:307** **நாள் :26.06.2015**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25.6.2015 அன்று தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் புதுக்கோட்டை மாவட்டம் – கறம்பக்குடியில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 71 கோடியே 93 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நல மாணவ மாணவியர் விடுதிகள், வகுப்பறையுடன் கூடிய அறிவியல் ஆய்வகக் கட்டடம், அரசு உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள், சமுதாய நலக் கூடங்கள், தரைப் பாலம் மற்றும் அணுகு சாலை ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

சமூகத்தில் அனைத்து தரப்பு மக்களும் சம வாய்ப்புகளைப் பெற்று பொருளாதார ரீதியிலும், சமூக வாழ்விலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், சமூகப் பொருளாதார வாழ்வில் பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், கல்வி வளர்ச்சியையும் பெருக்குவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்டம் – கறம்பக்குடியில் தரை மற்றும் முதல் தளத்துடன் மொத்தம் 5230 சதுர அடி கட்டட பரப்பளவில், சமையலறை, உணவு அருந்தும் கூடம், காப்பாளர் அறை, விடுதியில் உள்ள விளக்குகள் மற்றும் மின்விசிறிகளுக்கு தேவையான மின்சாரம் தயாரித்திட 5 KWP திறன் கொண்ட சூரிய ஒளி மின்சாதனம் உள்ளிட்ட வசதிகளுடன் சுமார் 50 மாணவியர் தங்குவதற்கு ஏதுவாக 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், திருப்பூர் மாவட்டம் – திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர், காடாம்பாறை, சின்னத்தடாகம், எஸ். புங்கம்பாளையம், தொண்டாமுத்தூர், பொள்ளாச்சி; சேலம் மாவட்டம் – சேலம் மாநகர், சேலம் சட்டக் கல்லூரி வளாகம், கொளத்தூர், அரகலூர், தலைவாசல், நெய்யமலை, மண்ணூர்; நாமக்கல் மாவட்டம் – நாமக்கல், நாமகிரிப்பேட்டை, செங்கரை–1, செங்கரை–2; தருமபுரி மாவட்டம் – தருமபுரி, பே. தாதம்பட்டி, மொரப்பூர், காளிப்பேட்டை, அனுமந்தபுரம், சித்தேரி–1, சித்தேரி–2; திண்டுக்கல் மாவட்டம் – கீரனூர், கள்ளிமந்தையம், பழனி;

காஞ்சிபுரம் மாவட்டம் – செய்யூர், நாகல்கேணி, மதுராந்தகம், தையூர்; திருவள்ளூர் மாவட்டம் – ஈக்கூவார்பாளையம்; திருவண்ணாமலை மாவட்டம் – கொளப்பலூர், மேலராணி, செங்கம், காஞ்சி, கலசப்பாக்கம்; திருவாரூர் மாவட்டம் – திருவாரூர்–1, திருவாரூர்–2, திருத்துறைப்பூண்டி, சவளக்காரன்; வேலூர் மாவட்டம் – பானாவரம், குடியாத்தம், ஆற்காடு; பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர், நெய்குப்பை; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருச்சி கண்டோன்மெண்ட், பொய்கைப்பட்டி, வாளசிராமணி, கானக்கிளியநல்லூர், திம்மராயசமுத்திரம்; இராமநாதபுரம் மாவட்டம் – ஆர்.எஸ். மங்கலம், பரமக்குடி; விருதுநகர் மாவட்டம் – மல்லாங்கிணறு, காரியாப்பட்டி; தஞ்சாவூர் மாவட்டம் – பேராவூரணி;

நாகப்பட்டினம் மாவட்டம் – வெட்டியகாடு; புதுக்கோட்டை மாவட்டம் – புதுக்கோட்டை, ரெகுநாதபுரம், ஒக்கூர், கீரனூர், பி. அழகாபுரி, மேலத்தானியம், வல்லத்திராக்கோட்டை, விராலிமலை; கிருஷ்ணகிரி மாவட்டம் – கல்லாவி; விழுப்புரம் மாவட்டம் – செவலப்புரை, செஞ்சி, கப்பூர், கண்டமங்கலம்; திருநெல்வேலி மாவட்டம் – தென்மலை, இராதாபுரம், விஸ்வநாதப்பேரி, அம்பாசமுத்திரம்; சிவகங்கை மாவட்டம் – சித்தலூர், இளையான்குடி, வேதியரேந்தல்; தூத்துக்குடி மாவட்டம் – நாசரேத்; அரியலூர் மாவட்டம் – திடீர்குப்பம்; கரூர் மாவட்டம் – கொசூர்; ஈரோடு மாவட்டம் – அரச்சலூர் மற்றும் பவானி; ஆகிய **83** இடங்களில் **66** கோடியே **88** லட்சத்து **56** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளி, கல்லூரி, தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவியர் விடுதிக் கட்டடங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம் – இரும்பேடு, கடலூர் மாவட்டம் – சிறுமங்கலம், கரூர் மாவட்டம் – சின்னம்மநாயக்கன்பட்டி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் – மாவுத்தம்பதி ஆகிய இடங்களில் **91** லட்சத்து **80** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள்;

ஏழை எளிய மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை அனைத்து வசதிகளுடன் சிறப்பாகவும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் வகையில் திண்டுக்கல் மாவட்டம் – இ. கோவில்பட்டி; திருவண்ணாமலை மாவட்டம் – மேல்வில்வராயநல்லூர், செய்யாமூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் – கொடக்கரை, மஞ்சுகொண்டப்பள்ளி, கரடிக்கல், காளிக்கட்டா; மதுரை மாவட்டம் – வில்லூர், காண்டை, கொடிமங்கலம், முண்டநாயகம்; புதுக்கோட்டை மாவட்டம்– நரங்கியம்பட்டு, இந்திராநகர், மஞ்சம்பேட்டை, விராலிபட்டி, முள்ளிக்காப்பட்டு, உலகங்காத்தான்பட்டி, தி. கீழையூர், வாழமங்கலம், வெள்ளானூர்; விழுப்புரம் மாவட்டம்– குரூர்; இராமநாதபுரம் மாவட்டம் – பொன்னையாபுரம்; திருப்பூர் மாவட்டம் – வல்லகுண்டபுரம்; கடலூர் மாவட்டம் – சேடபாளையம் இருளர் காலனி; ஆகிய இடங்களில் **3** கோடியே **37** லட்சத்து **25** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **24** சமுதாயக் கூடங்கள்;

திருவண்ணாமலை மாவட்டம் – பரமானந்தலில் 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தரைப் பாலம் மற்றும் அணுகுசாலை;

என மொத்தம் 72 கோடியே 93 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர் விடுதிகள், கூடுதல் வகுப்பறைகளுடன் கூடிய அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள், சமுதாய நலக் கூடங்கள், தரைப் பாலம் மற்றும் அணுகுசாலை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு என். சுப்ரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) தலைவர் திரு எஸ். கலைச்செல்வன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) திரு பொ. சிவசங்கரன், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி ஆ. சுகந்தி, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நல இயக்குநர் திரு சு. சிவசண்முகராஜா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : **26.6.2015**